**விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்**
**இரண்டாம் திருப்புதல் பொதுத்தேர்வுகள் -பிப்ரவரி 2012**
**வகுப்பு 10**
தமிழ் இரண்டாம் தாள்(செய்யுள் -உரைநடை)
பிரிவு-I (மதிப்பெண்கள்-20)
**பகுதி-1**

**I) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க** www.rktuitioncentre.blogspot.in **மதிப்பெண்கள்:** 100

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $5 \times 1 = 5$

1) வினைத்தொகை பயின்று வந்துள்ள சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) வந்த பொருள் ஆ) வருபுனல் இ) ஒண்பொருள் ஈ) தாமரைமுகம்
2) பண்பத்தொகை பயின்று வந்துள்ள சொல்லை தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) வெண்குழை ஆ) தடக்கரி இ) பொறுத்தல் ஈ) மாறா இளமை
3) உம்மைத் தொகையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) தாயும் சேயும் ஆ) சிரமுகம் இ) ஈன்குழவி ஈ) நன்கலம்
4) மு.்.டீது- இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது?
அ) ஐகாரக்குறுக்கம் ஆ) மகரக்குறுக்கம் இ) ஆய்தக்குறுக்கம் ஈ) ஔகாரக்குறுக்கம்
5) குறிப்புப் பெயரெச்சம் அமைந்த சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) படித்து வந்தான் ஆ) நல்ல பையன் இ) ஓடிச் சென்றான் ஈ) வந்து நின்றான்

**பகுதி-2**

**கோடிட்ட இடங்களை நிரப்புக:** $5 \times 1 = 5$

6) வாழைப்பழம் என்பது............விகாரம் ஆகும்.
7) 'மலரன்ன சேவடி'இத்தொடரில் அமைந்துள்ள உவம உருபு.................
8) மார்கழி, தை ஆகிய இரண்டும் .............காலத்திற்குரிய பெரும் பொழுதுகளாகும்.
9) முருகா சாப்பிட்டாயா? ஏன்று வினவப்படும் வினா...................ஆகும்.
10) மதிமுகம்- இவ்வுமைக்கான உருவகம்..................

**பகுதி-3** $10 \times 1 = 10$

11) மனிதன்- இச்சொல்லில் பயின்று வரும் மொழி யாது?
12) கொடு- இச்சொல்லை வினையெச்சமாக்குக.
13) இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்றுக.
14) ஒருமை பன்மை பிழைகளை நீக்கி எழுதுக.
பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிரிகின்றாளட.
15) சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.
வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து ஒழுகினால் மனிதநேயம் மலரும்.
16) தேறா மன்னா - இலக்கண குறிப்பு தருக.
17) பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
அவர் உடற்கூறு மருத்துவத்தில் மிகச்சிறந்த நிபுணர்.
18) வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.
நேத்து காட்டில் அடமழை பெய்தது.
19) கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.
சட்டத்தை மதிப்போம் குற்றம் களைந்த வாழ்வை வாழ்வோம் சட்டம் நம்மைக் காக்கும்.
20) ஐம்பொறி - இத்தொகைச் சொல்லை விரித்து எழுதுக.

***II.*** **கீழ்காணும் எவையேனும் ஐந்துனுக்கு விடையளிக்க** $5 \times 2 = 10$

21) புணர்ந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.
22) ஐகாரக்குறுக்கம் - விளக்குக.
23) பொதுமொழி என்றால் என்ன? சான்று தருக.
24) செம்மொழி - பிரித்து புணர்ச்சி விதி தருக.
25) முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.
26) அறுவகை வினாக்கள் யாவை?
27) பாடாண் திணை என்பது யாது?

பகுதி-2

***III.*** **கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்க** $2 \times 5 = 10$

28) கீழே உள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் தருக.
"ஆடிக் குடத்தடையும் ஆடும்போ தேயிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடி மண்டை
பரபரெனும் பாரில்பிண் ணாக்கமுன்டாம்
உற்றிடுபாம் பெள்ளனவே வோது.
29) தற்குறிப்பேற்ற அணி (அல்லது) சொல் பின்வருநிலையணி விளக்குக.
30) கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.
"ஒழுக்கத்தின் ஏய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

**பகுதி-2**

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க** $2 \times 5 = 10$

31) பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டினை எழுதுக.
32) அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துகளை சுருக்கி எழுதுக.
33) இலிண்ட்கிரென் பண்பு நலன்களை விளக்கி எழுதுக.

**பகுதி-3**

34) அ) **கீழ்க்காணும் பகுதியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களை தமிழாக்கம் செய்க.** $3 + 2 = 5$
டாடி, வர்ற சண்டே எனக்கு பரத்டே பட், நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே, வொய், டாடி.?
"சண்டே வர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்கிறதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹாப்பி தானே'' என்று கூறினார் தந்தை.
**ஆ) கீழுள்ள அரபு எண்களை தமிழெண்களாக மாற்றுக.**
37, 98, 24, 356

35) அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்க: 3+2=5

Trees are very useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicine

ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக:

i) No pain no gain. ii) The face is the index of the mind.
iii) Look before you leap. iv) Efforts never fail.

## பகுதி - 4

கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1×5=5

36) அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பு தருக:

உச்சி வெயில் மண்டையைப் பிளந்தாற் போல் அடித்துக் கொண்டிருந்தது. ஒரு விறகுக்கட்டை தலையில் சுமந்தபடி வீட்டை நோக்கி இராமன் நடந்து வந்தான். களைப்பின் மிகுதியால் விறகுக்கட்டை ஒரு மரத்தடியில் சாய்த்து வைத்தான். அப்போது ........... (அல்லது)

ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக:

மழை (அல்லது) சாலைப் பாதுகாப்பு.

## பகுதி - 5

37) கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்து எழுதுக: 5

பொழுது புலர்ந்தது; யாம்செய்த தவத்தால்,
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குவதற் கிங்குஉன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்
விழிதுயில் கின்றனை இன்னும்எம் தாயே
வியப்பிது காண்பள்ளி யெழுந்தரு ளாயே! - பாரதியார்.

## பகுதி - 6

38) கீழுள்ள படிவத்தை நிரப்புக: வங்கிக் கணக்கில் பணம் செலுத்தும் படிவம் 5

_______ கிளை நாள் _______
இடம் _______
சேமிப்புக் கணக்கு எண் _______
பெயர் _______
ரூபாய _______ ரூ.

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி / கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:
தொகை

காசாளர் எழுத்தர்/ மேற்பார்வையாளர்

கிளை _______ நாள் _______
இடம் _______
சேமிப்பு கணக்கு எண் _______
நிலையான கணக்கு எண்
பெயர் _______ ரூ.
ரூபாய் _______

காசோலை விவரம்:

| காசோலை எண்/நாள் | பெறப்பட்ட வங்கி/கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |
| | | |

பண விவரம்:

| | |
|---|---|
| 1000 × | |
| 500 × | |
| 100 × | |
| 50 × | |
| 20 × | |
| 10 × | |
| 5 × | |
| காசுகள் | |
| மொத்தம் | |

செலுத்துநர் கையொப்பம்

## பகுதி - 7

39) அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையளிக்க: 3+2=5

பதினொன்றாம் வகுப்பு படிக்கும் சுமதி அழுது கொண்டிருந்தாள். அவளின் பெற்றோர் அவளுக்குத் திருமணம் செய்ய முடிவெடுத்ததே அதற்குக் காரணம். மேலும் மேலும் படித்து சாதிக்க விரும்பிய அவளைப் பெற்றோர் கண்டு கொள்ளவில்லை.

i) சுமதி எதற்காக அழுது கொண்டிருந்தாள்? ii) இந்நிலையில் சுமதி என்ன முடிவெடுப்பாள்?
iii) இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சுமதிக்கு உங்களால் என்ன உதவி செய்ய முடியும்?

ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து வினாக்களுக்கு நும் கருத்தை எழுதுக:

பள்ளி மாணவர்கள், அலுவலகம் செல்வோர் என்று பேருந்து ஒரே நெரிசலாக இருந்தது. ஒரு திருடன் பயணி ஒருவரின் கைப்பையினை பிளேடால் அறுப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்.

i) இந்தச் சூழலில் நீ என்ன செய்வாய்?
ii) ''பிறருக்கும் உதவும் பண்பினை'' மற்றவருக்கு எவ்வாறு கற்றுக் கொடுப்பாய்?

## பகுதி - 1

IV. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க: 1×10=10

40) அ) நும் ஊருக்கு நூலக வசதி வேண்டி நூலக இயக்குநருக்கு கூட்டு விண்ணப்பம் வரைக. (அல்லது)

ஆ) பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

## பகுதி - 2

கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரையெழுதுக. தலைப்பு ஒன்று தருக: 1×10=10

41) அ) கணினி தோற்றம் - வளர்ச்சி - இணையம் - இணையதள வசதி - கணினி வழிக்கல்வி - கணினியின் வியத்தகு சாதனைகள் - பயன்படும் துறைகள் - உலகம் உள்ளங்கையில். (அல்லது)

ஆ) கல்வி - பெண்கல்வி - பெண்கல்வியின் அவசியம் - பல்துறை வளர்ச்சி - ஆணுக்கு இணையாகப் பணி - சமுதாயத்தில் பெண்கள் நிலை - முடிவுரை.

- - - - - - - - - -